ஸ்ரீமதேராமாநுஜாயநம:

நரசிம்மஸ்வாமிபேரில்

பஞ்சரத்நம்.

இவை

விழுப்புரம் தாலுக்கா வாழைப்பட்டு

கிராமத்திலிருக்கும்

பு. கந்தசாமி முதலியார்

வேண்டுகோளின்படி

ஷை தாலுக்கா செ. குளப்பாக்கம்

கவி. ரங்கசாமி நாயுடவர்களால்

இயற்றப்பட்டு

பி. ஷண்முக முதலியார் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நரசிம்மஸ்வாமிபேரில்

பஞ்சரத்நம்

இவை

விழுப்புரம் தாலுக்கா வாழைப்பட்டு

கிராமத்திலிருக்கும்

பு. கந்தசாமி முதலியார்

வேண்டுகோளின்படி

ஷை தாலுக்கா செ. குளப்பாக்கம்

கவி. ரங்கசாமி நாயுடவர்களால்

இயற்றப்பட்டு

பி. ஷண்முக முதலியார் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1911.

ஸ்ரீராமஜெயம் துணை.

சாற்றுக்கவிகள்.

விழுப்புரம் தாலுக்கா செ. குன்னத்தூர்
வ. இராமகிருஷ்ணு ரெட்டியாரவர்க லியற்றிய வெண்பா.

பார்புகழும்வாழைப் பதிவாழ்நரசிங்கன்
பேர்வளரப் பஞ்சரத்நம் பேசினான் பேர்வளரும்
செஞ்சிக் குளப்பாகை சேர ரங்கசாமிகவி
வஞ்சனைகள் நீக்கும்வகை.

ஷை தாலுக்கா செ. பூதூர் உபாத்தியாயர்
அய்யிலுநாயிடவர்கள் இயற்றியது.

கனகநுயிர்வாங்க கனேரனுவதாய் வந்தோன்
றனிவாழை தாய்பதியிற்றங்க நனிபஞ்ச
ரத்தினமுஞ்சொன்னு நரங்கசாமிக்கவிஞன்
பத்தியுளோர்க் காமெனவே பார்த்து.

வெண்பா.

சீரன்புலவுந் திருக்குருகைவண்காரி
மாரன்கழலை மனதுற்று பார்புகழும்
வாழைப்பதிவாழும் வாகுநரசிங்கன்மேற்
கோழையிலா பஞ்ச ரத்நங்கூர்.

ஸ்ரீராமஜெயம்.

பன்னிருசீர்க்கழில் நெடிலாசிரியவிருத்தம்.

சீர்வளரு செந்திருவளர்ந்த சிராமயனே
திவ்வியமங்கள னேயனே
திகழ்நான்குமறை சுருதிகலையாக மங்கள்
திரந்துதிக்கும் பாதனே
நீர்வளரு மத்திகோன்றனை யாளவேவந்த
னீதனே யருள்போதனே
னித்தியசுரூபனே பக்தபரிபாலனே
னின்மலா நந்தபரனே
கார்வளர்சரீரனே னிசிதரர்குரூரனே
கண்ணனே மணிவண்ணனே
காகுத்தனே சுத்தசத்துவ குணனனே
காளிங்க னிர்த்தாமனே
நார்வளர்மலற் பொழிற்சூழிய லூரும்
வாழைநகரில் கொலுவீற்றிருக்கும்
நற்சங்க ரணரங்க அகலங்க பவபங்க
நாசிங்க மிகுதுங்கனே

சந்ததமு முனது செயலென் று ரூதிகொள்ளுமற்
    சாதுக்களாமவர்கடம்
சஞ்சலங்களையெலாம் நீக்கியருள்செய்கின்ற
    தற்பரானந்தசுகனே
நந்தகோவிந்த வைகுந்தமுகுந்தனே
    நவனீதமதாருதனே
நளினபொற்பாதனே சீதாசமேதனே
    நற்பாண்டவர் தூதனே
மந்தராசலமதனை யேந்தியே வானவர்கள்
    மகிழவே யமுதமீந்த
மாயனே கோசலைச்சேயனே பவளமனை
    வாயனே யெனையாளுவாய்
நந்தவனமுங்கதலி வளர்பண்ணைசூழ்வாழை
    நகரில் கொலுவீற்றிருக்கும்
நற்சங்க ரணரங்க அகளங்க பவபங்க
    நரசிங்க மிகுதுங்கனே.

காலன்முதலான தேவர்க்கு மெட்டாதகக
கதியைக்கொடுக்கு முதலே
கனகநாமகனைப்பிளந்தவன் மதலையைக்
காத்து ரக்ஷித்ததேவே
கமையுரும் புவிமாத கத்தினு குலமேலாங்
கழியதேவகியகடினிற்
கண்ணனாய் வந்தவதரித்த சூரநாய்வந்த
காலனேமியை வதைத்தாய்
தமியேனை பவமேலாம்னீக்கியுன் னுளினைச்
சந்ததம் போற்றிசெய்யும்
தாசர்கள் குழங்களி லிருத்தி பிரம்மாநந்த
சாகரந்தனில் வீழ்த்துவாய்
நமதிஷ்டதேவென்றுனைத்து திப்போர் வாழை
நகரில் கொலுவீற்றிருக்கும்
நற்சங்க ரணாங்க அகளங்க பவபங்க
நரசிங்க மிருதுங்கனே

ஒருமாது புருடனுக்கொத்ததோர் மனைவியா
யுற்றொருபெணிற் காய்விடம்
உண்டுசுக னம்சனன் பிற்குரிய மனைவிக்
குருநங்கற்பினைக்கார்க்கவே
திருமணிட்டவரெலாம் புகழவந்தொருவர்க்கு
திகழ்கண்டியா கிருஷ்ணனாய்
திவ்யநாமம் பெற்றொருத்தருக்காய் நிசியில்
தேடியே பாச்சாவிடம்
கருணையுடனேமாழை தந்தாண்டவா பெங்கள்
கர்த்தனே பரிசுத்தனே
ககனவாசிகள் தினம் போற்றுநற்பத
மிந்தகசடனேற் கருள்புரிகுவாய்
நருவனசமாதுடன் சேவைதானன்வாழை
நகரில் கொலுவீற்றிருக்கும்
நற்சங்க ரணரங்க அகளங்க பவபங்க
நரசிங்க மிகுதுங்கனே.

பரிபூரணாசர்வகாரணா வென்றுனைப்
பலதினந் துதிகள்செய்யும்
பக்தராங் கர்தசாமிக்கு நன்வரமுதவி
பாதுகார்க்கருள்செய்குவாய்
சரியானபண்டரியில் புண்டரீகன் போற்ற
சந்த்ரபாகாநதியினிற்
றுளன்றியேயிந்த கலியுகத்தினி லதிக
தாசபூதர்கள் வேண்டிடும்
வரமுதவி செய்ததைப்போலிந்த வூரி
லுளவன்னியர்கள் செங்குந்தர்கள்
வையகத்தோர்மகிழ பொரிவள மெலாம்பெற்று
வாழ்கவே கருணைசெய்வாய்
நரிமைகோடரமாக செய்தவன் றாதிவாழை
நகரில் கொலுவீற்றிருக்கும்
நற்சங்க ரணரங்க அகளங்க பவபங்க
நரசிங்க மிகுதுங்கனே.

சம்பூர்ணம்.

வாழிவிருத்தம்.

அருமறைகள் போற்று மந்தணர்கள் வாழி
அடியார் துதி வாழி ப்ரபந்தம் வாழி
திரலா சுகவிராஜர் தினமும்வாழி
திகழவர்கள் செய்யும் நற்பாக்கள் வாழி
திருமாதி னருள்வாழை நகரும்வாழி
செழுமை யவ்வூரிலுள ஜெனர்கள்வாழி
நரசிங்கமேற் பஞ்சரத்னம்வாழி
நாளுமதை துதிப்போர்கள் வாழி வாழி.

ஸ்ரீமத்வரவரமுனியோகமஹா.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஹ.

P. SHUNMUGAM AND CO., MOUNT ROAD.